2022 மே 5]

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: *என்ன கோரிக்கைகள் விடுக்கிறார்களோ, அதைக் கேட்டு பரிசீலனை செய்து, அதன்படி அந்தத் திட்டம் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு பேரும் ஒரு நல்ல காரியத்தை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். உடனடியாக நம்முடைய செயலாளர் மற்றும் மாவட்ட நிர்வாகத்தோடு கலந்துபேசி எந்தச் சட்டத்தின்படி எடுத்தால் உங்களுக்கு அதிகப்படியான தொகை கிடைக்கும் என்பதையெல்லாம் ஆராய்ந்து, அங்கே நிலம் கொடுக்கிற மக்களுக்குச் சாதகமாக இந்த அரசாங்கம் செயல்படும். அதுபோன்று, வேலைவாய்ப்பு குறித்து யாருமே சொன்னதுபோன்று இதுவரையில் நடக்கவே இல்லை. இதுமட்டுமல்ல,* CPCL *மட்டுமல்ல; யாருமே இதுவரையிலும் அப்படி சொன்ன சொல்லை நிறைவேற்றியதாகத் தெரியவில்லை. இதை முதலிலேயே ஒழுங்குசெய்து, நிலம் எடுக்கிற நேரத்திலேயே* DRO *மத்தியிலே சொல்லி, எழுதி வாங்க முடியுமா என்பதையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அதனை ஒழுங்குசெய்து, அதற்கு வேண்டிய அந்தப் பணிகளைச் செய்து கொடுப்போம் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு பேர்களும் சொன்ன கோரிக்கையை நிச்சயமாக அரசாங்கம் பரிசீலித்து தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

4. மானியக் கோரிக்கைகள், 2022–2023, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 25 – இயக்கஊர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 48 – போக்குவரத்துத் துறை

(இ) கோரிக்கை எண் 29 – சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

– – – – –